# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2019 ஆடி மாதம் 29ம் திகதி தொடக்கம் ஆவணி 03ம் திகதி வரை

## *கிறிஸ்துநாதரின் வாழ்வில் அனுபவித்த இறை தாய்மையின் தந்தையின் அன்பு*

01. ஆரம்ப பாடல் புபுது பாடல் இல. 07 "தூய ஆவியே எம் மனதை……"

02. புகழ்ச்சிக்கான அறிமுகம்:

- நீங்கள் யார்? நீங்கள் எங்கே இருந்து வந்தீர்கள்? செல்வது எங்கே? உங்களுடைய வாழ்வை குறித்து உங்களுக்கு இருக்கும் தெளிவை இன்னும் ஒருவருடன் பகிர்ந்து கொள்ளவும்.

- உலகம் உங்களை எவ்வாறு நினைத்தாலும் உங்களைப் பற்றி உங்களுக்கே உறுதி இல்லாவிடினும் உலகத்திலிருக்கின்ற அனைவரையும் விட உங்களை அன்பு செய்யும் ஒருவர் இருக்கின்றார் என்று கடந்த வாரத்தில் நாம் அனுபவித்தோம். உங்களுக்கு எவ்வித சரீர இலட்சணங்கள் இருந்தாலும், மற்றவர்களுக்கு உங்களை அழகாக தோன்றாவிட்டாலும் இறைவனுக்கு நீங்கள் பெறுமதிவாய்ந்தவர்கள்.

- முழு உலகமுமே எதிர்த்து புரக்கணித்து, என்னை வெறுத்தாலும் எனக்கு பெறுமதியை கொடுத்திடும், நான் படுக்கையில் இருப்பினும் எனக்காக நித்திரை கொள்ளாமல் கண்ணயராமல் இருக்கின்ற இறைவனுக்கு எவ்வாறு கைமாறு செய்யக் கூடும். எமக்கு செய்யக் கூடிய ஒன்றே ஒன்று அவரை புகழ்ந்தவாறு, நமஸ்கரித்து, நன்றி புகழ்ச்சிக்கு உள்ளாகுவதாகும்.

- புபுது சிங்கள பாடல் இல. 146 பாடலை பாடியவாறு புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்

03. நாளுக்குரிய நற்செய்தி :-

- யோர்தான் ஆற்றில் பெற்ற இறை புத்திரத்தன்மையின் அடையாளத்தை என்றுமே, எவருக்கும் முன்னிலையில் தாழ்ச்சிக்கு உள்ளாகின்ற, அடையாளம் ஒன்று அல்ல. யூத ஆட்சியாளர்கள் இயேசு ஆண்டவரை 'தச்சனின் மகன்' என்று அறிமுகப்படுத்துவதற்கு முயற்சி செய்தாலும் அவரினுள் இருந்த உண்மையான அடையாளம் யாராலும் தாழ்த்த, அழிக்க முடியாமல் போய்விட்டது.
- நாட்டின ஆட்சியாளராகிய, தன்னை மரணத்திலிருந்து காப்பாற்றக் கூடிய, விடுதலை செய்யவதற்கு வல்லமையுடைய பிலாத்துவின் முன்னிலையில் தனது அடையாளத்தை வெளிப்படுத்திய முறை அவருக்கும் சவாலாகியது. அப்போது பிலாத்து அவ்வாறானால் 'நீ அரசன்தானோ' என்று அவரிடம் கேட்டார். அதற்கு இயேசு "அரசன் என்று நீர் சொல்கிறீர்." என்று பதிலளிர்தார் (புனித யொவான் 18:37)
- அலகை பாலைவனத்தில் நீண்ட நேரமாக முயற்சி செய்தும் இயேசு ஆண்டவர் அனுபவித்த அப் புத்திரத்தன்மை, அதை முன்கொண்டே சோதனைக்கு உள்ளாக்குவதற்காகும். வெளிப்படையான போராட்டங்களுக்கு எவ்வளவுதான் முகம் கொடுத்தாலும் அப் பாலைவனத்தில் பயங்கரமான நிலையிலும் கூட இறை தந்தைக்கு அடிபணிதல் வழியாக 'எனது மகனே எனது மகனே' என்ற குரளொலிக்கு உரிமையாளராகி எவ்வித தடுமாற்றமுமின்றி அந்நாள் வரைக்கும் இருந்த உலக நிலையை மறுபக்கம் பிரட்டுகின்றார்.

- நாமத்தை உச்சிரிப்பதற்கு கூட பயந்து இருந்த மக்களுக்கு இறைவன் எந்தளவு அன்பார்ந்தவர் என்பதையும் இறைவன், தந்தை தாயின் அன்பினால் நிரம்பிய இறைவனாவார் என்பதையும் வெளிப்படுத்துவதற்கு கற்றுக்கொடுப்பதற்கு பாவித்த உதாரணங்கள் வழியாக தெளிவாகின்றது.

  - புனித மத்தேயு 20:1-15 திராட்சை தோட்டத்தின் வேலையாளர்களுக்கு கூலியை கொடுத்தல்

  - புனித மாற்கு 6:30-44 ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்தல்

  - புனித மாற்கு 6:34 ஆயனும் ஆட்டு குட்டிகளும்

  - புனித லூக்கா 15:11-32 ஊதாரி மகனை ஏற்றுக் கொள்ளுதல்

  இவ் வேதாகம பகுதிகள் வழியாக இறை ஆண்டவர் அனுபவித்த இறை தந்தையின் தந்தை - தாயின் அன்பை சங்கமமாக்கிக் கொள்ளுங்கள்.

04. வாரம் முழுவதும்

- நான் இறை மகனாவேன். இறைவன் எனது தந்தையானவராவார். இது எனது வாழ்வின் உண்மையான, சத்தியமான நிலையா? இதை எமது வாழ்வின் யதார்த்தமாக்கிக் கொள்வோம்.
- அதற்கான வல்லமையை கேட்டு செபிப்போம். முடியுமான எல்லா வேலையிலும் திவ்விய நற்கருணை ஆண்டவரின் முன்னிலைக்கு செல்வோம்.

06. இறுதிச் பகழ்ச்சி :

புபுது பாடல இல. 160 “கழுகு தனது குஞ்சை…”